# எழுத்திலக்கணம்

**எழுத்திலக்கணம்** :

எழுத்தின் ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும், அறிய உதவுவதே எழுத்திலக்கணம் ஆகும்.
மொழியின் அடிப்படை அலகு எழுத்து ஆகும்.

**எழுத்திலக்கணப் பிரிவுகள்** :

- **முதல் எழுத்துக்கள்.**
- **சார்பெழுத்துகள்.**
- **சுட்டு எழுத்துக்கள்.**
- **வினா எழுத்துக்கள்.**
- **இன எழுத்துக்கள்.**
- **மாத்திரைகள்**
- **போலி எழுத்துக்கள்.**

## தமிழ் எழுத்தின் வகைகள் :-

தமிழ் எழுத்துக்கள் **இரண்டு** வகைப்படும். அவை :

- **முதலெழுத்துக்கள்.**
- **சார்பெழுத்துக்கள்.**

## முதலெழுத்துக்கள் :

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களும் முதலெழுத்துக்கள் ஆகும்.

உயிர் எழுத்துக்கள் : **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

மெய்யெழுத்துக்கள் : **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.**

## உயிர் எழுத்துக்கள் வகைகள் :

உயிர் எழுத்துக்கள் **இரண்டு** வகைப்படும்.
அவை :- **குறில், நெடில்.**

## குறில் எழுத்துக்கள் :

குறுகி ஒலிக்கும் எழுத்துக்களே குறில் எழுத்துக்கள் ஆகும்.
குறில் எழுத்துக்கள் : **அ, இ, உ, எ, ஒ.**

## நெடில் எழுத்துக்கள் :

நீண்டு ஒலிக்கும் எழுத்துக்களே நெடில் எழுத்துக்கள் ஆகும்.
நெடில் எழுத்துக்கள் : **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.**

## மெய்யெழுத்துக்கள் வகைகள் :

மெய்யெழுத்துக்கள் **மூன்று** வகைப்படும் அவை :-

- **வல்லினம்**.
- **மெல்லினம்**.
- **இடையினம்**.

### வல்லினம் :

வன்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே வல்லினம் ஆகும்.

வல்லினம் : **க், ச், ட், த், ப், ற்**.

### மெல்லினம் :

மென்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே மெல்லினம் ஆகும்.

மெல்லினம் :- **ங், ஞ், ண், ந், ம், ன்**.

### இடையினம் :

வன்மைக்கும், மேன்மைக்கும் இடையில் ஒலிக்கும் எழுத்துக்களே இடையினம் ஆகும்.

இடையினம் :- **ய், ர், ல், வ், ழ், ள்**.

**சார்பெழுத்துக்கள்** :

உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும், சார்ந்து வரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் எனப்படும்.

**சார்பெழுத்துக்கள் வகைகள்** :

சார்பெழுத்துக்கள் **பத்து** வகைப்படும்.

அவை :-

1. **உயிர்மெய்**.
2. **ஆய்தம்**.
3. **உயிரளபெடை**.
4. **ஒற்றளபெடை**.
5. **குற்றியலுகரம்**.
6. **குற்றியலிகரம்**.
7. **ஐகாரக்குறுக்கம்**.
8. **ஔகாரக்குறுக்கம்**.
9. **மகரக்குறுக்கம்**.
10. **ஆய்தக்குறுக்கம்**.

## உயிர்மெய் :

உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும், சேர்ந்து உருவாகிய எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும்.

உயிர் எழுத்துக்கள் * மெய்யெழுத்துக்கள்

12 * 18 = 216.

**சான்று** :- க் + அ = க, க் + இ = கி

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

## ஆய்த எழுத்து :

தமிழ் மொழியில் ஃ என்ற எழுத்தே ஆய்த எழுத்து ஆகும். இரண்டு எழுத்துகள் சேரும் போது ஆய்த எழுத்து உருவாகும்.

**சான்று** :- எஃகு, அஃது.

## அளபெடை :

செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் எழுத்துகள் தம் இயல்பான அளவுக்கு மேல் நீண்டு ஒலிப்பது அளபெடை ஆகும்.

## அளபெடை வகைகள் :

அளபெடை **இரண்டு** வகைப்படும் அவை :-

- **உயிரளபெடை**.
- **ஒற்றளபெடை**.

## உயிரளபெடை :

செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்வதற்காக எழுத்துக்கள் நீண்டு ஒலிப்பதே உயிரளபெடை ஆகும்.

## உயிரளபெடையின் வகைகள் :

உயிரளபெடை **நான்கு** வகைப்படும் அவை :-

- **இயற்கை அளபெடை**.
- **சொல்லிசை அளபெடை**.
- **இன்னிசை அளபெடை**.
- **செய்யுளிசை அளபெடை**.

**இயற்கை அளபெடை** :

இயல்பாக சொல்லில் வரும் எழுத்துக்கள் அளபெடுப்பதே இயற்கை அளபெடை ஆகும். **சான்று** :- மரூஉ ஒரூஉ.

**சொல்லிசை அளபெடை** :

ஒரு பெயர்ச் சொல்லை வினை எச்சமாக மாற்றுவதே சொல்லிசை அளபெடை ஆகும்.

**சான்று** :- நசைஇ விரும்பி, தொகைஇ(தொகுத்து), வளைஇ(வளைத்து).

**இன்னிசை அளபெடை** :

குறில் எழுத்துக்கள் நெடில் எழுத்துக்கள் ஆகி அளபெடுத்தலே இன்னிசை அளபெடை ஆகும்

**சான்று** :- **கெடுப்பதூஉம்** கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே **எடுப்பதூஉம்** எல்லாம் மழை.

கெடுப்ப**தூஉம்**, எடுப்ப**தூஉம்**

'**து**' குறில் எழுத்துக்கள் '**தூ**' நெடில் எழுத்தாகி அளபெடுத்தலே இன்னிசை அளபெடை ஆகும்.

**செய்யுளிசை அளபெடை** :

செய்யுளில் ஓசை குறையும் போது அளபெடுத்து ஓசையை நிறைவு செய்வது செய்யுளிசை அளபெடை ஆகும். செய்யுளிசை அளபெடைக்கு மற்றொரு பெயர் **இசைநிறை அளபெடை** ஆகும்.

**சான்று** :- நமச்சிவாய **வாஅழ்க** நாதன் தாள் வாழ்க

## ஒற்றளபெடை :

செய்யுளில் ஓசை குறையும் இடத்தில் மெய்யெழுத்துகளும் அளபெடுக்கும் அவற்றையே ஒற்றளபெடை என்கிறோம்.

**சான்று** : வண**ங்ங்**கினான்

ஒற்றளபெடை எழுத்துக்கள் : **ங், ஞ், ண், ந், ம், ய், ல், வ், ள், ன், ஃ.**

## குற்றியலுகரம் :

ஒரு சொல்லில் வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிப்பது குற்றியலுகரம் என்கிறோம்.

குற்றியலுகரத்தில் உகரம் சொல்லின் இறுதி எழுத்தாகி வரும்.

**சான்று** :- பாக்கு, பேசு, நாடு, காது, அம்பு, ஆறு.

## குற்றியலுகர வகைகள் :

குற்றியலுகரம் **ஆறு** வகைப்படும் அவை :-

- **நெடில் தொடர் குற்றியலுகரம்**.
- **ஆய்தத் தொடர் குற்றியலுகரம்**.
- **உயிர்த்தொடர் குற்றியலுகரம்**.
- **வன் தொடர் குற்றியலுகரம்**.
- **மென் தொடர் குற்றியலுகரம்**.
- **இடைத் தொடர் குற்றியலுகரம்**.

**<u>நெடில் தொடர் குற்றியலுகரம்</u>** :

தனியாக உள்ள நெடில் எழுத்தைத் தொடர்ந்து **கு**, **சு**, **டு**, **து**, **பு**, **று**, என்னும் எழுத்துகள் வந்தால் அது நெடில் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** :- ஆறு, காது, பாடு.

**<u>ஆய்தத் தொடர் குற்றியலுகரம்</u>** :

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து **கு**, **சு**, **டு**, **து**, **பு**, **று** என்னும் எழுத்துகள் வந்தால் அது ஆய்தத் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** :- கஃசு, அஃது

**<u>உயிர்த்தொடர் குற்றியலுகரம்</u>** :

உயிர் எழுத்தைத் தொடர்ந்து **கு**, **சு**, **டு**, **து**, **பு**, **று**, என்னும் எழுத்துகள் வந்தால் அது உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** : வரகு, வயது, கிணறு.

**<u>வன் தொடர் குற்றியலுகரம்</u>** :

வல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து **கு**, **சு**, **டு**, **து**, **பு**, **று** என்னும் எழுத்துகள் வந்தால் அது வன் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** : பாக்கு, மச்சு, பட்டு, பத்து, அடுப்பு, காற்று.

**மென் தொடர் குற்றியலுகரம்** :

மெல்லின மெய்எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்தால் அது மென் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** :- ச**ங்கு**, ப**ஞ்சு**, ந**ண்டு**, ப**ந்து**, பா**ம்பு**, க**ன்று**.

**இடைத் தொடர் குற்றியலுகரம்** :

இடையின மெய் எழுத்தைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்தால் அது இடைத் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

**சான்று** :- மூழ்கு, செய்து, மார்பு.

**குற்றியலிகரம்** :

ஒரு சொல்லில் வரும் இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிப்பது குற்றியலிகரம் என்கிறோம்.

**குற்றியலிகரத்தின் வகைகள்** :

குற்றியலிகரம் **இரண்டு** வகைப்படும் அவை :-

- **தனி மொழிக் குற்றியலிகரம்**.
- **புணர் மொழிக் குற்றியலிகரம்**.

**தனி மொழிக் குற்றியலிகரம்** :

'ம்' என்ற எழுத்திற்குப் பின் யகரம் வருவதால் குறைந்து ஒலிக்கிறது. இதுவே தனிமொழிக்குற்றியலிகரம் ஆகும்.

**சான்று** : கேண்மியா, சென்மியா

"மி" என்ற எழுத்தில் காணப்படும் இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.

**புணர் மொழிக் குற்றியலிகரம்** :

புணர்மொழிக் குற்றியலிகரம் என்பது இரண்டு சொற்கள் சேரும் போது உருவாகும் குற்றியலிகரம் ஆகும்.

**சான்று** :- பாடு + யாது = பாடியாது, நாடு + யாது = நாடியாது

**ஐகாரக்குறுக்கம்** :

சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் ஐகாரம் இரண்டு மாத்திரையில் குறைந்து ஒரு மாத்திரையாக ஒலிக்கும். இதை **ஐகாரக்குறுக்கம்** என்று கூறுவர்.

**ஐ** என்கிற உயிர் எழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும்.

**சான்று** : ஐப்பசி, **வை**கல் - முதல்

**கடை**சி, இ**றை**வன் - இடை

ம**ழை**, ந**கை**, க**டை** - இறுதி

**ஔகாரக் குறுக்கம்** :

சொல்லுக்கு முதலில் வரும் ஔகாரம் தனக்கு உரிய இரண்டு மாத்திரையில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிப்பதை ஔகாரக் குறுக்கம் என்று கூறுவர்.

**சான்று** : **ஔ**வையார், **வெள**வால்
**கடை** - இறுதி

**மகரக்குறுக்கம்** :

மகர மெய் அரை மாத்திரையிலிருந்து குறைந்து கால்மாத்திரையாக ஒலிப்பதை மகரக்குறுக்கம் என்பர்.

**சான்று** : மருண்ம், தரும் வளவன்.

**ஆய்தக்குறுக்கம்** :

சொல்லின் இடையில் வரும் ஆய்த எழுத்து அரை மாத்திரையில் இருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும். இதுவே ஆய்தக் குறுக்கம் எனப்படுகிறது.

**சான்று** : எஃ்கு, வெஃ்கு

## சுட்டு எழுத்துக்கள் :

ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பயன்படும் எழுத்துகள் சுட்டு எழுத்துகள் எனப்படுகிறது.

**சான்று** :- இப்புத்தகம், அம்மரம்.

## சுட்டு எழுத்துகள் வகைகள் :

சுட்டு எழுத்துகள் **ஐந்து** வகைப்படும் அவை :-

- **சேய்மைச் சுட்டு**.
- **அண்மைச் சுட்டு**.
- **அகச் சுட்டு**.
- **புறச் சுட்டு**.
- **சுட்டுத் திரிபு**.

## சேய்மைச் சுட்டு :

தொலைவில் உள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டுவதால் இதனை சேய்மைச் சுட்டு என்பர்.

**சான்று** : அவ்வீடு, அக்கரை.

## அண்மைச் சுட்டு :

அருகில் உள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டுவதால் இதனை அண்மைச் சுட்டு என்பர்

**சான்று** : இப்பூனை, இப்புத்தகம், இம்மாடு.

## அகச் சுட்டு :

ஒரு சொல்லுக்கு உள்ளே இருந்து, சுட்டுப் பொருளையும் உணர்த்துவதால், இவற்றை அகச்சுட்டு என்பர்

**சான்று** : அவன், இவள், அது, இது.

## புறச் சுட்டு :

சொல்லுக்கு வெளியே இருந்து சுட்டுப் பொருளை உணர்த்துவதால் இவை **புறச் சுட்டு** எனப்படுகிறது.

**சான்று**:. அக்குளம் இம்மாடு

**சுட்டுத் திரிபு** :

வடிவத்திலிருந்துதிரிந்து, பொருளைச் சுட்டுவதால் இவை சுட்டுத் திரிபு எனப்படுகிறது.

**சான்று** :- அந்த மரம், இந்த வீடு.

**வினா எழுத்துக்கள்** :

தமிழில் ஆ, எ, ஏ, ஓ, யா ஆகிய எழுத்துகள் வினாப் பொருள் தரும் எழுத்துகள் எனவே இதனை **வினா எழுத்துக்கள்** என்பர்.

**வினா வகைகள்** :

வினா **இரண்டு** வகைப்படும் அவை

- **அக வினா**
- **புற வினா**

**அக வினா** :

சொல்லுக்கு உள்ளே இருந்து வினாப் பொருளை உணர்த்துவது **அகவினா** எனப்படும்.

**சான்று** : ஏன்? யார்? என்ன? எங்கு?

**புற வினா** :

சொல்லுக்கு வெளியே இருந்து, வினாப் பொருளைத் தந்தால் அது **புறவினா** எனப்படும்.

**சான்று** : எம்மரம்?, நின்றானா?, தருவாளா?

## இன எழுத்துக்கள் :

ஒத்து இருக்கும் எழுத்துகளை **இன எழுத்துக்கள்** என்பர்
**சான்று** : த**ங்க**ம், ப**ஞ்சு**, ந**ண்டு**, பா**ம்பு**, ப**ந்து**

உயிர் எழுத்துக்களில் இன எழுத்துகள்:.
**அஆ**, **இஈ**, **உஊ**, **எஏ**, **ஒஓ**.

மெய் எழுத்துக்களில் இன எழுத்துகள்:.
**க்ங், ச்ஞ், ட்ண், த்ந், ப்ம், ற்ன்**

## மாத்திரை :

எழுத்துக்களை ஒலிப்பதற்கு ஆகும் கால அளவை '**மாத்திரை**' என்று குறிப்பிடுவர்.

இயல்பாக கண் இமைத்தலும் கைநொடித்தலுக்கும் ஆகும் கால அளவே **மாத்திரை** எனப்படும்.

1. குறுகிய ஒலியுடைய எழுத்துக்களை ஒலிக்க ஆகும் நேரம் (அ, இ, க, ச, கு) **ஒரு மாத்திரை**

2. நீண்ட ஒலியுடைய எழுத்துக்களை ஒலிக்க ஆகும் நேரம் **இரண்டு மாத்திரை** (ஆ, கா, ஈ, போ)

3. மெய்யெழுத்துக்களை ஒலிக்க ஆகும் நேரம் **அரை மாத்திரை**
   **சான்று** - பட்டு - 'ட் ' - அரை மாத்திரை.

## போலி எழுத்துகள் :

சொற்களில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வருவதைப் போலி என்று கூறுவர்.

**போலி எழுத்துகளில் வகைகள்** :-

போலி எழுத்துகள் **மூன்று** வகைப்படும். அவை:-

- **முதற் போலி**
- **இடைப் போலி**
- **கடைப் போலி**

### முதற் போலி :

ஒரு சொல்லின் முதல் எழுத்து, போலியாக வருவதை **முதற்போலி** என்று கூறுவர்.

**சான்று** : பசல் - **பை**சல்
மயல் - **மை**யல்
மஞ்சு - **மை**ஞ்சு

### இடைப்போலி :

சொல்லுக்கு இடையில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு எழுத்து வருவது **இடைப்போலி** ஆகும்.

**சான்று** : அரயர் - அ**ரை**யர், இலஞ்சி - இ**லை**ஞ்சி

### கடைப்போலி :

சொல்லின் இறுதியில் ஓர் எழுத்து வரவேண்டிய இடத்தில் வேறு எழுத்து வருவது **இறுதிப் போலி** எனப்படும். இதைக் **கடைப்போலி** எனவும் கூறுவர்.

**சான்று** : முகம் - முகன்
நலம் - நலன்
நிலம் - நிலன்